**தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன ஆயர்வேத திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 220 – ஆயர்வேத திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஆயர்வேத திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.17 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.1.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.3.1 |
| | | 3. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.9 |
| | | 4. | கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.11 |
| | | 5. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.13 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 6. | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை அடையாமை. | 2.1.2(ஆ) |
| | | 7. | செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை. | 2.1.2(இ) |
| | | 8. | பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தினை பெற்றிராத செயற்திட்டங்கள். | 2.1.2(ஈ) |
| | | 9. | பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.3.2 |
| | | 10. | சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரம் குறைவடைதல் | 2.4(அ) |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.1.2(ஆ) |
| | | 2. | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.1.2(இ) |
| | | 3. | பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள். | 2.3.2 |
| | | 4. | மக்களுக்கான சேவையை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.8 |
| | | 5. | உள்ளக கணக்காய்விலான குறைபாடுகள் | 2.15 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | 1. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பாடமை. | 2.13 |
| | | 2. | இணக்கமின்மை | 2.14 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 1. | வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள் | 2.4(ஈ) |
| | | 2. | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.3.1 |
| | | 3. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.9 |
| | | 4. | கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.11 |
| | | 5. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை. | 2.1.3 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டு அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் | 1. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக | 2.10 |
| | | 2. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| | | முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் தொடர்பாக | |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.1.2(ஆ) |
| | | 2. செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல். | 2.1.2(இ) |
| | | 3. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் அடையாத செயற்திட்டங்கள் | 2.1.2(ஈ) |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளை களுக்கும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும் | குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.17 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | நிதியுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்ளப்படாமை | 2.17 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதித் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் (Action Plan) தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டினை அடிப்படையாக கொண்ட முன்னுரிமைகளுக்கமைய உரிய முறையில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan), செயற்பாட்டு சட்டகம் (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட அடைவு/பிரதிபலன் (Output/Outcome) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). திணைக்களத்தின் கீழான ஒவ்வொரு பிரிவுகள், உப நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் மூலிகை பூங்காக்களின் தேவைப்பாட்டினை அடிப்படையாக கொண்ட பணிகள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii). பிரதேசத்தின் வானிலை, காலநிலை மற்றும் மூலிகை செய்கைக்குரிய ஏனைய விடயங்கள் தொடர்பில் தனித்தனியாக கவனம் செலுத்தி அந்தந்த மூலிகைத் தோட்டங்களுக்கு உரிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து பிரிவுகளினதும், உப நிறுவனங்களினதும் மற்றும் மருத்துவமனைகள் மற்றும் மூலிகைத் தோட்டங்களுக்குரிய பணிகளின் செயன்முன்னேற்றம் மதிப்பீட்டிற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் தாபிக்கப்பட்டிராததுடன், செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் தொடர்பிலும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை.**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய, திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 819.8 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 80 பிரதான பணிகள் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டியனவாக காணப்பட்டன. கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய அவற்றுள் 14 பணிகள் மாத்திரம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிராமையால் அவற்றின் நிதி முன்னேற்றத்தை இனங்காண முடியாதிருந்தது. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய ரூபா 304 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள 07 பிரதான செயற்பாடுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டினை இனங்காண முடியாத 07 பிரதான செயற்பாடுகள், நிர்மாணிப்பதற்கு

உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதிலான தாமதம், ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை திருத்த நேர்ந்துள்ளமை மற்றும் பெறுகைகள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டிராமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் ஆரம்பிப்பதற்கேனும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 16 செயற்பாடுகளுக்காக விரிவான தரவுகள் இல்லாதிருந்தமையின் காரணத்தால் அவற்றுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை இனங்காண முடியாதிருந்தது. அவ்வாறே செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிராமையின் காரணத்தால் நிதி முன்னேற்றத்தை குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது. அவ்வாறே அந்த பணிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட அடைவ மட்டத்தினை அடையப்பெற்றிருக்கவில்லை.

(ii). வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கமைய ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 232 மில்லியனான 07 செயற்பாடுகளின் செயற்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிராமையால் நிதிச் செயன்முன்னேற்றத்தை இனங்காண முடியாதிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டமும் அடையப்பெற்றிருக்கவில்லை.

(iii). செயல்நடவடிக்கை திட்டத்திற்கமைய திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 103.175 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 29 பிரதான பணிகள் தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிராத காரணத்தால் அந்த செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் இனங்காணப்படவில்லை.

**(இ) செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிடல்**

02 மூலிகைப் பயிர்ச்செய்கை செயற்திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடுகளில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 3.899 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மூலிகை செய்கைக்குரிய காணிகள் இனங்காணப்படாமை மற்றும் காணிகள் உரிய முறையில் சுவீகரிக்கப்படாமை போன்றவற்றின் காரணமாக அந்த செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

**(ஈ) நிதி விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் பௌதீக ரீதியான செயன்முன்னேற்றத்தினை அடைந்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டினுள் 12 நிர்மாணங்களுக்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 46.66 மில்லியன் தொகையில், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 36.46 மில்லியன் எஞ்சியிருந்தது. அதற்கமைய நிதிச் செயன்முன்னேற்றம் 22 சதவீதமான போதிலும், பௌதீக செயன்முன்னேற்றம் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(ii). மீளாய்வாண்டினுள் 17 மாவட்ட செயலகங்களுக்கு 34 பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 70.94 மில்லியனில், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் ரூபா 44.71 மில்லியன் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அதற்கமைய நிதி செயன்முன்னேற்றம் 37 சதவீதமாக இருந்ததுடன், பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

மீளாய்வாண்டினுள் 34 பல்வேறு அரச நிறுவனங்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை அடிப்படையாக கொண்டு உள்நாட்டு குடிபானங்களை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 645,133 தொகை செலவிடப்பட்டு இலவசமாக இலைக்கஞ்சி மற்றும் உள்நாட்டு குடிபானங்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் வியாபித்து உள்நாட்டு குடிபானங்களை பிரபல்யபடுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றினை இனங்கண்டு நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆயர்வேத திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 யூலை 20 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 அமுல்படுத்தப்பட்டிருந்த உள்நாட்டு உதவி செயற்திட்டங்கள்

இலங்கையின் உள்நாட்டு மருத்துவ முறைமைகளை அடிப்படையாக கொண்ட ஔடத உற்பத்தி கைத்தொழிலுக்காக நியமத்துடனான மூலப் பொருட்களை வழங்கும் நோக்கில் விவசாயிகளின் பங்களிப்புடனான மூலிகை செய்கை செயற்திட்டமொன்றினை மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்காக உள்நாட்டு நிதிகளில் ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 3.731 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 16.269 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 81 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவு செய்யப்பட்ட 05 மாவட்டங்களினுள் அரசிற்கு சொந்தமான காணிகள் மற்றும் நிதியேற்பாடு ஆகியவற்றை வழங்கி 2,000 விவசாயிகளுடாக மூலிகைத் தன்மை வாய்ந்த செடிகளை வளர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 3 மாவட்டங்களின் 96 விவசாயிகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டினுள் 6 மூலிகைத் தோட்டங்களில் சான்றுபடுத்தப்பட்ட தரத்துடனான விதைகள் மற்றும் இழைய பொருட்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகித்தல், பயிர்ச்செய்கைக்கான நிலத்தை பயன்படுத்துவதற்கும் மூலப்பொருட்கள் மற்றும் விதைகளை கொள்வனவு செய்வதற்கான நிதியினை விடுவித்தல் போன்ற பணிகள் செயற்திட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அந்த முன்மொழிவினை நிறைவேற்றுவதற்கு முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராததுடன், முன்மொழிவுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் கண்காணிப்பின் அடிப்படையில் தீர்வை வரிச் சலுகையின் கீழ் 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்காக சராசரியாக ரூபா 2,660 மில்லியன் கூட்டுத்தொகை

செலவிடப்பட்டிருந்தமையால், மூலப்பொருட்களுக்காக வெளிநாட்டிற்கு வெளிப்பாய்ச்சப்படும் அந்நிய செலாவணியை நாட்டினுள் தக்க வைத்துக் கொள்ளல் மற்றும் தரத்தில் உயர்வான மருத்துவ மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நிதியேற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமையால் 2018 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய செயற்பட்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,065.61 மில்லியன் நிதியேற்பாடு திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 613.53 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் வருமாறு

| செலவின விடயம் | செலவின விடய விபரம் | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| | **வழங்கல்கள்** | | | |
| 1201 | எழுதுகருவி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 3.600 | 3.425 | 0.174 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 38.325 | 37.089 | 1.236 |
| 1204 | மருத்துவ வழங்கல்கள் | 98.000 | 73.348 | 24.652 |
| 1205 | ஏனையவை | 12.099 | 11.994 | 0.105 |
| | **மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல்** | | | |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 14.232 | 11.623 | 2.609 |
| 2013 | இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 12.045 | 4.712 | 7.333 |
| 2014 | கட்டிட நிர்மாணம் | 882.310 | 467.788 | 414.522 |
| 2015 | காணி மற்றும் நில மீட்டல் | 5.000 | 3.553 | 1.447 |
| | மொத்தம் | **1,065.611** | **613.532** | **453.079** |

**2.3.1 பெறுகைகளை திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெறுகைத் திட்டமிடல் மற்றும் ஆரம்ப நிலை**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டிக்கமைய திணைக்களத்தினால் ஆகக் குறைந்தது 3 வருட காலத்திற்காக பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஆரம்ப ஒப்பந்தக் கட்டம்**

(i). அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டிக்கமைய ஏதேனுமொரு கொள்வனவினை ஆரம்பம் முதல் முடிவுறுத்தும் வரையிலும் ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளினதும் படிமுறைகளை கால அடிப்படையில் விபரிக்கும் பெறுகை நேர அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் நேர அட்டவணையில் ஒவ்வொரு பெறுகை பணியும் குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii). மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்திற்கு ஆயர்வேத மருத்துவமனைகளுக்காக கொள்வனவு செய்யப்படும் பச்சை மற்றும் உலர்ந்த மூலிகைகள் மற்றும் மூலிகைத் தோட்டங்களில் திட்டமிடப்பட்ட நிர்மாணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 பெறுகை நடைமுறையினை அமுல்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் மாற்று மருந்துகள் தொடர்பான சர்வதேச மாநாடு மற்றும் விற்பனை கண்காட்சி (Trad Med International Symposium Exhibition) - 2017**

பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் மாற்று மருந்துகள் தொடர்பான சர்வதேச மாநாடு மற்றும் விற்பனை கண்காட்சி 2017 நவம்பர் 23,24 மற்றும் 25 ஆகிய மூன்று நாட்களினுள் நடாத்துவதற்காக 2017 ஒக்தோபர் மாதத்தின் போது அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 40 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 39.41 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). இது தொடர்பில் எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், வெளிநாட்டு வியாபார நிறுவனங்களின் இணைப்பிற்காக இந்திய விலைக்கேள்வியாளருக்கு ஒரு விற்பனைக்கூடத்தின் வருமானத்தில் 25 சதவீதமான தரகுப் பணத்தை செலுத்துவதற்கு, சர்வதேச விளம்பர நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 3,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை செலுத்துவதற்கும் ஆராய்ச்சி கட்டுரையொன்றினை ஐக்கிய இராட்சியத்தின் Bio Medical Central சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக அந்த நிறுவனத்திற்கு 3,060 ஸ்ரேலின் பவுன்களை செலுத்த நடவடிக்கை எடுத்தமை அல்லது அதனுடன் தொடர்புடைய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டமைக்கான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). கண்காட்சியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானமான ரூபா 12.5 மில்லியன் கிடைக்கப்பெற்றமையை உறுதிப்படுத்தும் தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii). கண்காட்சிக்குரிய சேவை வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக பத்து உருப்படிகளின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த கேள்வி அமைப்பானது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(iv). பத்து சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு ஒப்பந்த பெறுமதி குறிப்பிடப்படாது சேவை அளிப்பு கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(v). இந்த மாநாடு மற்றும் கண்காட்சிக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 39.41 மில்லியன் திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 38.02 மில்லியனுக்குரிய பெறுகைகள் தொடர்பில் விலைக்கேள்வி ஆவணங்கள் (Bid Document) ஒப்பந்த நிபந்தனைகள் (Conditions of Contract) சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகளின் எண்ணிக்கை, கிடைத்த விலைக்கேள்விகள், விலைக்கேள்வி திறப்பதற்கான அறிக்கைகள், பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் அறிக்கைகள், ஒப்பந்த பெறுமதி, வழங்குநர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், விலைக்கேள்வி பிணை முறிகள், செயலாற்றல் முறிகள் ஆகியன கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சீர்படுத்தக்கூடிய 52 கட்டில்களை கொள்வனவு செய்தல்**

2018 மார்ச் மாதத்தின் போது ரூபா 4,678,400 செலவிடப்பட்டு சீர்ப்படுத்தக்கூடிய மெத்தைகளுடனான 52 கட்டில்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மெத்தையற்ற வலையுடனான 24 கட்டில்கள் மற்றும் மெத்தையற்ற பலகையுடனான 24 கட்டில்களையும் கொள்வனவு செய்வதற்கு தேவையான அமைப்புக் குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் அரசாங்க கைத்தொழிற்சாலையிலிருந்து விலைக்கேள்விகள் வருவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த விலைக்கேள்வி தொடர்பில் கவனத்திற் கொள்ளாது, அந்த கட்டில்களுக்கு பதிலாக சீர்படுத்தக்கூடிய (Adjustable) 52 கட்டில்கள் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii). அரச கைத்தொழிற்சாலைகளிலிருந்து விலைக்கேள்வி கோரப்பட்டது எவரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் எந்த மருத்துவமனையின் அல்லது நிறுவனத்தின் தேவையை பூர்த்தி செய்வதற்காக அல்லது சாதாரண கட்டில்களுக்கு பதிலாக சீர்ப்படுத்தக்கூடிய (Adjustable) 52 கட்டில்களை கொள்வனவு செய்வதற்கு காரணமாக அமைந்த விடயங்களோ கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(iii). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு, விடயம் தொடர்பான நிபுணர் ஒருவரின் மற்றும் பெறுகைகள் செயல்வழிக் கோவை தொடர்பான போதியளவான

அறிவுடைய ஆகக்குறைந்தது ஒரு அங்கத்தவரையும் கொண்டிருக்க வேண்டிய போதிலும், விடயம் தொடர்பான அறிவு இல்லாத மூன்று உத்தியோகத்தர்களைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றினால் இந்த பெறுகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv). அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் அறிவுரையினை பெற்று சீர்ப்படுத்தக்கூடிய (Adjestable) கட்டில்களின் அமைப்புக் குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிராததுடன், குறிப்பான அமைப்புக் குறிப்பீடுகள் விலைக்கேள்வி கோரல் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2 (இ) வழிகாட்டியின் பிரகாரம், அமைப்புக் குறிப்பீடுகளை அங்கீகரிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(v). தேவைப்பாட்டு அமைப்புக்குறிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டிராமையின் காரணத்தால் விலைக்கேள்விகளை முன்வைத்திருந்த 04 விலைக்கேள்வியாளர்களால் பல்வேறு மாற்று அமைப்புக்குறிப்பீடுகள் குறிப்பிடப்பட்டு மாற்று விலைக்கேள்விகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

(vi). சீர்ப்படுத்தக்கூடிய கட்டில்களுக்காக மாத்திரம் விலைக்கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், மெத்தை அல்லது மெத்தை விரிப்புக்களுடனான சீர்படுத்தக்கூடிய கட்டில்களுக்கான அமைப்புக்குறிப்பீடுகளை தயாரிப்பதற்கோ அல்லது விலைக்கேள்வி கோருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மாத்திரம் மெத்தை மற்றும் கட்டில் விரிப்புக்களுடனான சீர்ப்படுத்தக்கூடிய 02 வரையான கட்டில்களுக்காக விலைக்கேள்வி முன்வைத்திருந்ததுடன், எஞ்சிய 03 விலைக்கேள்வியாளர்களும் மெத்தை மற்றும் கட்டில் விரிப்புக்களனற்ற சீர்ப்படுத்தக்கூடிய கட்டில்களுக்காக மாத்திரம் விலைக்கேள்வி சமர்ப்பித்தனர். தெரிவு செய்யப்பட்ட வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த மெத்தை மற்றும் கட்டில் விரிப்புக்களுடனான சீர்ப்படுத்தக்கூடிய 02 வகையான கட்டில்களுக்காக எஞ்சிய 03 விலைக்கேள்வியாளர்களும் விலைக்கேள்வி முன்வைத்திருக்ககவில்லை என்பது கவனத்திற் கொள்ளாது தொழிநுட்ப மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vii). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.10.1(ஆ) வழிகாட்டிக்கமைய மற்றும் இந்த பெறுகைக்குரிய விலைக்கேள்வியாளர்களுக்கான அறிவுரை (ITB) இலக்கம் 35.4 இன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளரின் அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்காக மெத்தை மற்றும் கட்டில் விரிப்புக்களுடனான சீர்படுத்தக்கூடிய 02 வகையான கட்டில்களை வழங்குவதற்குரியதாக 05 வருட அனுபவம் மற்றும் தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றை பரீட்சிக்காது விலைக்கேள்வி மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(viii). கொள்வனவு செய்யப்பட்டிருந்த கட்டில்கள், மாதிரிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix). கொள்வனவு செய்யப்பட்டிருந்த கட்டில்கள் மற்றும் மெத்தைகள் தரம் குறைந்தவையென ஆயர்வேத ஆராய்சி நிறுவனத்தின் நிபுணத்துவ மருத்துவரால் ஆயர்வேத ஆணையாளர் நாயகத்திற்கு 2018 சனவரி 17 ஆந் திகதி தெரிவித்திருந்ததுடன், அதன் பின்னர் மெத்தைகள் மாத்திரம் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டிருந்தன. எனினும் மெத்தைகள் உரிய முறையில் மாற்றப்பட்டிருக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. 02 வருட உத்தரவாத

காலம் முடிவடைவதற்கு முன்னர் இந்த கட்டில்கள் மற்றும் மெத்தைகளை உரிய முறையில் மீளமைப்பதற்கோ செயலாற்றல் பிணைகளை காசாக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x). மெத்தைகளற்ற வலையுடன் கூடிய கட்டில்கள் மற்றும் மெத்தையற்ற பலகையுடனான 02 வகையான கட்டில்களுக்காக அமைப்புக்குறிப்பீடுகளை தயாரித்ததன் பின்னர் அரச கைத்தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்டிருந்த விலைக்கேள்வி கட்டிலொன்றுக்கு முறையே ரூபா 20,300 மற்றும் ரூபா 28,360 மாத்திரமும் ஆனமையாலும், பெறுகையின் இறுதியில் தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளரிடமிருந்து மெத்தை மற்றும் கட்டில் விரிப்புகளற்ற சீர்ப்படுத்தக்கூடிய கட்டில்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 87,200 செலுத்தப்பட்டுள்ளமையாலும், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கட்டில்கள் மற்றும் விலைக்கேள்வி கோரப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மெத்தைகள் மற்றும் கட்டில் விரிப்புகள் நியமமென்று இல்லாதிருந்தமையாலும், இந்த பெறுகையின் சிக்கனத்தன்மை, விளைவுடைய தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) கைத்தடி ஆயர்வேத மருத்துவமனையின் மருத்துவ உற்பத்திக்கூடத்தினை நிர்மாணித்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

வடிவமைப்பும் நிர்மாணமும் (Design & Build) முறையில் கைத்தடி ஆயுர்வேத மருத்துவமனையின் மருந்து பொருள் உற்பத்திக்கூடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 63.56 மில்லியனான வற் வரி நீங்கலான ஒப்பந்த பெறுமதியுடன் தனியார் கம்பனியொன்றிற்கு 2016 யூலை 15 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.10.1(அ) வழிகாட்டியின் பிரகாரம், ஆக்கபூர்வமான பிரவேசமொன்று தேவைப்படும் கூட்டிணைக்கப்பட்ட பாரிய அளவிலான ஒப்பந்தங்களுக்காக வடிவமைத்து நிர்மாணிக்கும் (Design & Build) முறைமை பின்பற்றப்படுதல் பொருத்தமானதெனினும், 1,415 கன அடி அளவான மிகவும் குறைவான இடவசதியுடனான கட்டிடமொன்றிற்காக அந்த முறைமை பின்பற்றப்பட்டிருந்தமையின் காரணத்தால் ஒரு கன மீட்டருக்கு பெறுமதி சேர் வரி நீங்கலாக ரூபா 44,947 தொகை செலவிட நேர்ந்திருந்தது.

(ii). உற்பத்திக்கூடத்திற்கு தேவையான அடிப்படை தேவைப்பாடுகள் 06 ஒப்பந்ததாரரால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டிட திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத போதிலும், அது தொடர்பில் கருத்திற் கொள்ளாது நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1.5 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii). திட்டங்களை உரிய முறையில் வடிவமைக்கப்பட்டிராமையால், மருத்துவமனையின் நுழைவாயிலின் மேலதிக 50 மீட்டர்களை நிர்மாணிப்பதற்கு, கட்டிடத்தினுள்ளும் வெளியேயும் கேபள்களை பொருத்துவதற்கும் roller shutter கதவொன்றினை பொருத்துவதற்கும் ரூபா 2.91 மில்லியன் தொகையான மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

(iv). மருந்தகத்தின் கூரையை 685 மீட்டர்கள் மூடுவதற்கு ரூபா 667,875 செலவிடப்பட்டு எஸ்பெஸ்டன் தகரங்களை இடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக ZN/AL Roofing Sheet இடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 708,975 ஆன மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

(v). 2018 ஆம் ஆண்டின் இறுதியில் பட்டியல்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரரால் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்தமை அல்லது திணைக்களத்தினால் சரியாக கையேற்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொரள்ள ஆயர்வேத மருத்துவமனையின் இரண்டாவது கட்டத்திற்குரிய கட்டிடத்தினை நிர்மாணித்தல்**

---

பொரள்ள ஆயர்வேத மருத்துவமனையின் இரண்டாம் கட்டிடத்திற்குரிய கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,113.16 மில்லியனாக இருந்ததுடன், 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியளவில் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி நீங்கலான மொத்த தொகை ரூபா 982.06 மில்லியனாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). உரிய முறையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராமையால், மரக் கதவுகளின் செரிவினை பின்னர் மாற்றுவதற்கு நேர்ந்தமை, திட்டங்களில் உள்ளடக்கப்படாத நீர்த் தாங்கியொன்றை நிர்மாணிக்க நேர்ந்தமை மற்றும் பிளைவுட் கதவுகளுக்கு பதிலாக அலுமினியம் கதவுகளை பொருத்த நேர்ந்தமை ஆகியவற்றால் ரூபா 18.69 மில்லியன் மேலதிக செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

(ii). கட்டிடத்தில் பொருத்துவதற்காக ரூபா 7.37 மில்லியன் மொத்தக் கிரயமான 200 தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் 108 தண்ணீர் கொதிக்க வைக்கும் கீசர்கள் (Water gezers) ஆகியன கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை முடிவுறுத்துவதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால், அந்த இயந்திரங்களுக்கான 02 வருட உத்தரவாதக் காலத்தில் 1 வருடம் 06 மாதங்கள் கடந்த பின்னர் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

(iii). 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 1,113.16 மில்லியனாக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 1,127.44 மில்லியன் மாத்திரமானமையால், ஒப்பந்ததாரரால் முன்வைக்கப்பட்டிருந்த பட்டியல்களுக்காக உரிய காலத்தினுள் கொடுப்பனவை மேற்கொள்ள தவறியமையின் அடிப்படையில் ஒப்பந்ததாரரால் ரூபா 27.91 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்களுக்காக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

(iv). இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த காலத்தை நீடிக்கும் கடிதத்தின் பிரகாரம் 2018 சனவரி 02 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் பிரதான நீர்த்தாங்கி (Water sump) மற்றும் சாக்கடை முறைமையினை நிர்மாணிக்கும் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிராமையால் கட்டிடத்தை பாவனைக்கு எடுக்க முடியாத நிலையொன்று உருவாகியிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

பொரள்ள ஆயர்வேத மருத்துவமனையின் நிர்வாக பணிகள் இடம்பெறும் அலுவலக வளாகம், இலக்கம் 02 மற்றும் இலக்கம் 05 உடைய இரண்டு பஞ்சகர்ம வாட்டுகளின் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளும் இரண்டு வாட்டுகளையும் உள்ளடக்கும் வகையில் பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கி இயந்திரம் பொருத்தப்பட்டதன் பின்னர் 10 இயந்திர மணித்தியாலங்கள் மாத்திரம் இயங்கியிருந்ததாகவும், அதனை 2010 ஆம் ஆண்டின் பின்னர் பயன்படுத்தியிருக்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த இயந்திரத்தின் பாதுகாப்பிற்காக போதியளவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் இயந்திரத்தின் உள்ளக கட்டமைப்பு (Panel Board) விலங்குகளால் கடித்து சேதமாக்கப்பட்டிருந்தன.

### (ஆ) வாகன பயன்பாடு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு ஆகியவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

நிதிப்பிரமாணம் 1645 (ஆ), (இ) மற்றும் நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு குறிப்புக்களின் மூலப் பிரதிகள் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும், அதற்கடுத்த மாதத்தின் 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான 51 வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). சம்பவக்குறிப்பு புத்தகம் உரிய முறையில் பேணப்பட்டிராமை.

வாகனம் தொடர்பான விபரங்கள் வாகனங்களின் சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டு, வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 12 வாகனங்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii). எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளாமை

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கும் 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீட்டர்கள் தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்புடைய பிரதான பழுதுபார்த்தலின் பின்னர் அல்லது மேற்படி விடயங்களில் முதலாவது சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட

வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டின் பின்னர் திணைக்கள வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2000 ஆம் ஆண்டின் போது ஆயர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 14.61 மில்லியன் கிரயமான Gas Chromatography Mass Spectometer (GCMS) இயந்திரத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பேணிச் செல்லப்படும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் 2012 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆகஸ்ட் மாதம் வரையான 06 வருட காலப்பகுதியினுள் இயந்திரமானது 11 சந்தர்ப்பங்களில் மாத்திரம் பரிசோதனைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii). ஆயர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 3.21 மில்லியன் கிரயமான டென்சிடனோ மீட்டர் மற்றும் அதனுடன் தொடர்புடைய கணனி செயலிழந்து காணப்பட்ட போதிலும், அதனை பழதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது உரிய முறையில் கைத்தவிர்ப்பதற்கு 08 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்திக்கமைய 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அந்த அறிக்கைகள் 2018 யூலை 20 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இறுதியாக 2016 ஆம் ஆண்டின் போதே வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii). மேற்படி சுற்றிக்கையின் 3.1.5 பந்தியின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் அழிக்கப்பட வேண்டிய, பழுது பார்க்கப்பட வேண்டிய, விற்பனை செய்ய வேண்டிய மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கக்கூடிய பொருட்கள் தொடர்பில் பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே நிதிப்பிரமாணம் 770 இன் பிரகாரம் பயன்படுத்த முடியாத பொருட்களை உரிய முறையில் கைத்தவிர்க்க வேண்டும். எவ்வாறெனினும், 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பாய்வுக் குழுவினால் எவ்வித அதிகாரமுமின்றி கைத்தவிர்ப்புச் சபையாக செயற்பட்டு திணைக்களத்தின் கீழுள்ள 16 நிறுவனங்களின் பொருட்கள் ஏலமிடப்பட்டிருந்தன.

## 2.5 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காத வகையில் 42 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,444.29 மில்லியன் நிதியேற்பாட்டினை ரூபா 114.32 மில்லியனால் மிகைத்து ரூபா 234.87 மில்லியனுக்கான கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ 8 (ii) பொறுப்புகள் தொடர்பான கூற்றுக்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 282.85 மில்லியனான பொறுப்புகள் நிலவியதுடன், அவற்றுள் ரூபா 245.75 மில்லியனான பொறுப்புகளுக்காக மாத்திரம் திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன், அந்த அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 2.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிராத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறு

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **வருடம்** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 5.10 | 2012 யூலை 13 ஆந் திகதி திணைக்களத்திலிருந்து வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மருத்துவரொருவருக்கு அப்போதிருந்து 15 மாதங்களுக்கான ரூபா 548,376 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 200,000 மீள அறவிடப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய ரூபா 348,376 தொகை மற்றும் ரூபா 137,094 தொகையான அரசாங்க கட்டணங்கள் உள்ளடங்கலான ரூபா 485,470 கூட்டுத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2015 | 3.12 | திணைக்களத்தின் லொறியானது 2014 யூன் 03 ஆந் திகதி முதல் யூன் 27 ஆந் திகதி வரையிலும் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக அறவிடப்பட வேண்டிய வாடகையான ரூபா 102,261 தொகை 2018 ஒக்தோபர் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**2.7 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயர்வேத ஆராய்சி நிறுவனத்தின் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பான ஆராய்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயர்வேத ஆராய்சி நிறுவனத்தினால் டெங்கு, கொலஸ்டிரோல், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்கள் போன்ற தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பான ஆராய்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டமானது ஆராய்ச்சி மட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ii). இந்த செயற்திட்டத்திற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணி 286 ஆக இருந்ததுடன், அத் திகதியில் உள்ளபடியாக 163 பதவி வெற்றிடங்கள் நிலவின.

(iii). அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நிலவும் அத்தியாவசிய பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படாது மற்றும் தேவையான ஆய்வுகூட வசதிகளை பூர்த்தி செய்யாது 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான வருடங்களில் ரூபா 164.97 மில்லியன் கிரயமுடைய ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்படும் போது, 2016 ஆம் ஆண்டின் போதும் ரூபா 38.05 மில்லியன் கிரயமான ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பதவியணி இணைத்துக் கொள்ளப்படாமையால் 2018 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் ரூபா 65.07 மில்லியன் கிரயமுடைய உபகரணங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் தேவையான இரசாயன பொருட்களை கொள்வனவு செய்யமையால் ரூபா 1.91 மில்லியன் கிரயமான உபகரணங்களை பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) ஆராய்ச்சி நிறுவனத்தின் பாரம்பரிய அறிவினை பாதுகாத்தல் மற்றும் தேசிய மருத்துவத்தினை மேம்படுத்தும் செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). பாரம்பரிய அறிவினை பாதுகாத்தல் மற்றும் தேசிய மருத்துவத்தினை மேம்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் காணப்படும் அனைத்து பாரம்பரிய மருத்துவர்களிடமும் உள்ள அறிவினை பாதுகாப்பதற்காகவும் அதற்காக கட்புல தகவல்கள் உலக மையமொன்றினை தாபிப்பதற்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த செயற்திட்டமொன்று 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 27.0 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கட்புல ஊடகப் பிரிவொன்றை தாபிப்பதற்காக சுமார் ரூபா 12.0 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள போது, ரூபா 23.56 மில்லியன் செலவிடப்பட்டு அந்த பிரிவுக்குக தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பிரிவின் பணிகளை மேற்கொள்வதற்குக நேரடியாக தேவையான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு இணைத்துக்கொள்ளப்பட்டிராததுடன், குறித்த உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டன.

(ii). கட்புல அலகொன்றாக தொழில்சார் மட்டத்திலான புகைப்படக்கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான அறிவு மற்றும் பயிற்சியற்ற ஆயர்வேத மருத்துவரொருவர் அந்த அலகில் இணைப்பு செய்யப்பட்டிருந்தார். அதன் காரணமாக கட்புல அலகின் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேறியில்லாததுடன், ஆயுர்வேத மருத்துவராக அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய சேவையும் திணைக்களத்திற்கு இழப்பாகியிருந்தது.

(iii). செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான ஆராய்ச்சி நிறுவனத்தின் பாரம்பரிய அறிவினை பாதுகாத்தல் மற்றும் தேசிய மருத்துவத்தினை மேம்படுத்தலுடன் தொடர்புடையதாக திட்டமிடப்பட்டிருந்த மருத்துவ நூல்கள், மருத்துவ உபகரணங்கள், ஏனைய மருத்துவ தகவல்களை பாதுகாத்தல், 10 பரம்பரைகளின் பாரம்பரிய மாணவர்களை பயிற்றுவித்தல், உள்நாட்டு பாரம்பரிய அறிவு தொடர்பில் புலமைச் சொத்து உரித்தினை உறுதிப்படுத்தல், பாதுகாக்கப்பட்ட 100 புத்தகங்களின் பிரதிகள் மற்றும் வருடாந்த சஞ்சிகைகளை வெளியிடல் மற்றும் பாரம்பரிய அறிவினை பாதுகாக்கும் உலக மையத்தினை நிறுவுதல் போன்ற பணிகளில் ஒரு பணியையேனும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(இ) மைத்திரிபால சேனாநாயக்க ஞாபகார்த்த பாரம்பரிய ஆராய்ச்சி மருத்துவமனை மற்றும் அருங்காட்சியகத்தினை நிர்மாணித்தல்

---

மைத்திரிபால சேனாநாயக்க ஞாபகார்த்த பாரம்பரிய ஆராய்ச்சி மருத்துவமனை மற்றும் அருங்காட்சியகத்தினை மிஹிந்தலையின் இறுப்புகன்னி பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக 2008 யூலை 18 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. மொத்த பொறியியல் மதிப்பீடானது ரூபா 586.70 மில்லியனாக இருந்ததுடன், அதன் முதலாவது கட்டம் ரூபா 39.95 மில்லியனுக்கு நிர்மாணித்து நிறைவு செய்வதற்கு 2012 நவம்பர் 26 ஆந் திகதி இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). முதலாவது கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் திணைக்களத்திற்கு 2017 மார்ச் 31 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 வழிகாட்டிக்கமைய அமைப்புக்குறிப்பீடுகளுடன் ஒத்திருந்த ஏனைய நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், சான்றுறுதிப்படுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகள், உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு அமைவானவை என்பதை உறுதிப்படுத்தி பணியை முடிவுறுத்தும் சான்றிதழொன்று பொறியியலாளரால்/மதியுரையாளரால் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு பணி முடிவுறுத்தல் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் இந்த மருத்துவமனை நோயாளர்களின் சிகிச்சைகளுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் தொடர்பில் 2017 யூலை 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகள் 2018 யூன் 31 ஆந் திகதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

- கதவுகள் தாள்ப்பாள் போடப்பட்டிருந்தமையால் உட்புறம் பரிசோதிக்க முடியாது போயிருந்ததுடன், பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வேலைத்தளத்தில் கழற்றி அகற்றப்படாமையால் வேலைத்தளத்தினுள் இரண்டு களஞ்சியங்கள் காணப்பட்டன.

- கையளித்தமையின் பின்னர் இது வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் கட்டிடத்தை சுற்றிலும் புதர்கள் அடர்ந்திருந்தன. சன்னல்களுக்கு கிரீல் பொருத்தப்பட்டிராததுடன், ஊடு காட்டும் கண்ணாடிகளுடனான சன்னல் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தமையால் அதன் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- நீர் இணைப்பு மற்றும் மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கூரையினைச் சுற்றிலும் அடிக்கப்பட்டுள்ள மூலைப் பட்டிகள் பல்வேறு இடங்களில் கழன்று போயிருந்ததுடன், அத்திவாரத்தின் மேற்பகுதியின் மதிலானது பல இடங்களிலும் வெடிப்பிற்குள்ளாகியிருந்தது.

- சுவர் மற்றும் கூரை ஆகியவற்றுக்கிடையே பாரிய அளவிலான வீடொன்றுடன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணத்தால் பரிசோதிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் புறாக்கள் வந்து தங்குமிடமாக மாறியிருந்தது. யன்னலின் நிலையின் கதவிற்கு மேற்பகுதியின் (2½ அடி) பலகை பட்டிகளுடனான நிலைகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் யன்னலின் மேற்புறம் பொருத்தப்பட்டுள்ள பலகைகளுக்கிடையே இடைவெளி அதிகமாக காணப்பட்டமையால் பல்வேறு விலங்குகளுக்கு கட்டிடத்தினுள் உட்புகுவதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்பட்டது.

(iii). செயற்திட்டத்தின் எஞ்சிய கட்டம் 03 இன் பணிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நிதிப்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

(iv). இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த மருத்துவமனை வளாகத்தின் உரித்தினை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மதவாச்சியில் சிறுநீரக மருத்துவமனையொன்றினை நிர்மாணித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் பல்வேறு மாவட்டங்களில் பரவிக் காணப்படும் சிறுநீரக நோயினை முற்றாக ஒழிப்பதற்காக உள்நாட்டு மருத்துவ விஞ்ஞானத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய பங்களிப்பினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் 50 கட்டில்களுடனான மருத்துவமனையொன்று மதவாச்சியில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பொறியியல் மதிப்பீடானது ரூபா 53,836,395 ஆக இருந்ததுடன், அதனை காலத்திற்கு ஏற்ற தேவைப்பாடொன்றாக கருதி 2014 ஆம் ஆண்டிலேயே நிர்மாணங்களை முடிவுறுத்துவதற்காக பெறுகை நடைமுறையிலிருந்து விலகி அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அரசாங்க பெறுகைகள் செயல்வழிக் கோவையின் 2.14.1 ஆம் பந்திக்கமைய பெறுகை நடைமுறையிலிருந்து விலகுவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii). இந்த ஒப்பந்தத்திற்கு உரியதாக அளவிடைப் பத்திரம் தயாரிக்கப்பட்டிராததுடன், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மதிப்பாய்வு செய்வதற்கும் பொறியியல் சான்றிதழொன்றை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii). 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒட்டு மொத்த திருத்தப்பட்ட ஒப்பந்தக் கிரயமான ரூபா 85,373,218 தொகை செலுத்தி முடிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 வழிகாட்டிக்கமைய அமைப்புக்குறிப்பீடுகளுடன் இணங்கிய ஏனைய நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் சான்றுபடுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளை, ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய சான்றுறுதிப்படுத்தி பணி முடிவுறுத்தல் கடிதமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv). இந்த மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ரூபா 85,373,218 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் இரசாயனகூட சேவைகள் நிறுத்தப்பட்டமை

பொரள்ள ஆயுர்வேத போதனா மருத்துமனையின் ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டிருந்த வளிச்சீராக்கி இயந்திரங்கள் இரண்டில் ஒன்று முழுமையாக செயலற்றிருந்ததுடன் எஞ்சிய இயந்திரம் அவ்வப்போது செயலிழந்தவாறு காணப்பட்டது. அந்த இரசாயக் கூடத்தில் பொருத்தப்பட்டுள்ள மாதமொன்றிற்கு சுமார் 100 full blood count பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய Hematology Analyzer இயந்திரத்தின் இயக்கத்திற்கு நேரடியான தாக்கமொன்றினை ஏற்படுத்தியிருந்தது. நோயாளர் பிணியாய்வு சேவைகளை தொடர்ச்சியாக நடாத்தும் நோக்கில் 2018 மார்ச் 12 ஆந் திகதி ரூபா 400,000 செலவிடப்பட்டு 02 வளிச்சீராக்கி இயந்திரங்கள் அந்த ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும் இந்த வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கு தேவையான மின்சார இணைப்பினை பெற்றிராத காரணத்தால் 2018 யூன் 28 ஆந் திகதி வரையிலும் 02 வளிச்சீராக்கி இயந்திரங்களும் இயக்க முடியாமையால் full blood count பரிசோதனைகள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன.

(ஊ) வளிச்சீராக்கி இயந்திரத்தை உரிய முறையில் பேணுதல்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). திணைக்களம் மற்றும் அதன் கீழான நிறுவனங்களுக்காக மீளாய்வாண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட வளிச்சீராக்கி இயந்திரங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வளிச்சீராக்கியும் பொருத்தப்பட்டுள்ள இடம் மற்றும் இயந்திரம் தொடர்பான எவ்வித தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பதிவேடுகள் அல்லது கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வளிச்சீராக்கி இயந்திரங்களுக்காக கிடைத்திருந்த இலவச சேவை வழங்கலின் பின்னர் இயந்திரத்தை உரிய முறையில் பாராமரிக்கக்கூடிய வகையில் சேவை உடன்படிக்கைகளை கைச்சாத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). பொரள்ள ஆயர்வேத போதனா வைத்தியசாலையில் பொருத்தப்பட்டிருந்த செயலிழந்துள்ள 21 வளிச்சீராக்கி இயந்திரங்களை பழுதுபார்த்து தருமாறும், அதன் பின்னர் சேவைப்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து தருமாறும் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் அது தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மருத்துவமனையில் பொருத்தப்பட்டிருந்த 73 வளிச்சீராக்கி இயந்திரங்களில் 44 செயலிழந்த நிலையிலும், 20 இயந்திரங்கள் சேவைக்கு உட்படுத்த வேண்டிய நிலைமையிலும், 3 இயந்திரங்கள் பகுதியளவான செயற்பாட்டு நிலையிலும் காணப்பட்டன.

(எ) பொரள்ள ஆயர்வேத போதனா மருத்துவமனையின் பச்சை மருந்து ஒப்பந்தம்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டின் போது பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு தேவையான 416 பச்சை மருந்து பொருட்களில் 361 வகையானவற்றை விநியோகிக்கும் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு 2017 மார்ச் 13 ஆந் திகதி வரையிலும் காலம் கடந்திருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் முதலாவது காலாண்டிற்கு தேவையான பச்சை மருந்துப் பொருட்கள் போதியளவில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக முன்னைய ஆண்டினட இறுதிக் காலாண்டிற்கு ஒப்பாக மீயர்வாண்டின் முதலாவது காலாண்டின் போது க்வாத, ரச, சூரண போன்ற உற்பத்திகள் முறையே 22 சதவீதம், 54 சதவீதம் மற்றும் 27 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே ஏனைய 14 வகையான மருந்துகளில் 750 மி.லீட்டர் போத்தல்கள் 600 மற்றும் 231.25 கிலோ கிராம் அளவுகளை வெளியில் கொள்வனவு செய்வதற்காக ரூபா 944,450 தொகை செலவிட நேர்ந்திருந்தது.

(ii). தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் இருவருக்கு முறையே ரூபா 7,216,250 தொகை மற்றும் ரூபா 6,677,000 தொகையான ஒப்பந்த பெறுமதியுடைய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த பெறுமதி உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 வழிகாட்டிக்கமைய ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு குறைவற்ற சதவீதத்தினை செயலாற்றல் பிணைமுறிகளாக பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், வழங்குநர் இருவரிடம் முறையே 1.5 சதவீதம் மற்றும் 0.88 சதவீத்திற்கு சமனான பெறுமதிகளில் மாத்திரம் செயலாற்றல் பிணைமுறிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய முறையே ரூபா 613,381 மற்றும் ரூபா 608,942 இனால் குறைத்து செயலாற்றல் பிணைமுறிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(ஏ) பொரள்ள ஆயர்வேத போதனா மருத்துவமனையின் மருந்து உற்பத்திக்கூடம் மற்றும் களஞ்சியப்படுத்தல் மருந்தக கட்டளைகளுக்கு முரணாக நடாத்திச்செல்லல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). பொரள்ள ஆயர்வேத போதனா மருத்துவமனையில் உற்பத்தி செய்யப்படும் அரிஸ்ட பிளாஸ்திக் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்துகின்றமையால் அவற்றின் தரத்திற்கு தாக்கம் ஏற்படுமா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ii). 2016 ஆம் ஆண்டு முதல் உற்பத்திக்கூடத்தின் பின்புறத்தினைப் போன்றே இறுதி உற்பத்தி பொருட்களின் களஞ்சியத்தின் முன்புறம் அமைந்துள்ள கழிவகற்றல் கட்டமைப்பொன்று வழிந்தோடி மிகவும் துர்நாற்றம் வீசுவதாகவும், முடிவுப் பொருள் மருந்துப்பொருட்கள் களஞ்சியத்தில் அரிஸ்ட பிரிவின் மின்சாரக் கட்டமைப்பு செயலிழந்து காணப்படுவதாகவும் வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறெனினும், 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கழிவகற்றல் கட்டமைப்பினை புனரமைப்பதற்கோ மின்சாரக் கட்டமைப்பினை செயற்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பாரம்பரிய மருத்துவ நிபுணர்களை ஆயர்வேத மருத்துவமனைகளின் விளைதிறனுக்காக பயன்படுத்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). கண் தொடர்பான நோய்கள், எலும்பு முறிவு, தீக்காயம், பாம்புக்கடி, மன நோய், கட்டிகள் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்கள் தொடர்பான 19 பாரம்பரிய நிபுணத்துவ மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு 06 ஆயுர்வேத மருத்துவமனைகளுக்கு இணைப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 6.45 மில்லியன் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இந்த நிபுணத்துவ மருத்துவர்களை இணைத்துக்கொள்வதற்கு காணப்படும் அதிகாரம், அங்கீகாரம் மற்றும் தெரிவு செய்த அடிப்படை மற்றும் அவர்களின் தனிப்பட்ட கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii). உள்நாட்டு மருத்துவ கல்லூரிகளிலுள்ள மாணவர்களை கற்பித்தலில் ஈடுபடுத்தி ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு உயர்வான பங்களிப்பொன்றை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான முறையான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii). பொரள்ள ஆயுர்வேத போதனா மருத்துவமனையினுள் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டவாறு அந்தந்த பாரம்பரிய நிபுணத்துவ

மருத்துவர்களின் தகவல்களை பெயர்ப்பலகைகள் மூலம் மக்களுக்கு காட்சிப்படுத்தாமை, இந்த மருத்துவர்களிடம் நோயாளர்களை அனுப்புவதற்கான அடிப்படையினை இனங்காணாமை, பிணியாய்வுகளுக்கு போதியளவான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமை, பாரம்பரிய மருந்துகளின் அடிப்படையில் சிகிச்சை பெறக்கூடிய நடைமுறையொன்றினை அறிமுகம் செய்யாமை போன்ற விடயங்களின் காரணமாக பாரம்பரிய மருத்துவ முறைகளை மக்களுக்கு பிரபல்யப்படுத்துவதற்கான முறையான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iv). பாரம்பரிய நிபுணத்துவ மருத்துவர்களின் தரமான சேவைகளுக்காக கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்ற போதிலும், அவர்களிடம் சிகிச்சை பெறுவதற்காக முன்வரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது. அந்த சிக்கலைத் தீர்ப்பதற்காக 2018 யூன் 18 ஆந் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த குழு நிறைவேற்ற வேண்டிய பணிகள் உரிய முறையில் குறிப்பிடப்பட்டிராததுடன், குழுவிற்காக குறிப்பானதொரு கால எல்லையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாமையால் கட்டணம் அறவிடப்படும் அறைகள் மூடப்பட்டிருந்தமை

---

பொரள்ள ஆயுர்வேத போதனா மருத்துவமனையில் கட்டணம் அறவிடப்படும் 20 அறைகளைக் கொண்ட பஞ்சகர்ம கட்டிடத்தின் கூரையானது சிதைவடைந்திருந்தது. அவ்வாறே சிவிலினிலிருந்து நீர் வடிதல் மற்றும் சலவைக் கற்கள் பெயர்ந்து போதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் அந்த 03 அறைகளும் சுமார் 20 மாத காலமாக மூடப்பட்டிருந்தன. அவ்வாறே இரண்டாவது நோயாளர் விடுதிக் கட்டிடத்தில் சுத்திகரிப்பு வசதிகளிலான குறைபாடுகள் மற்றும் கழிவகற்றல் கட்டமைப்பு செயலிழந்தமை ஆகிய காரணங்களால் கட்டணம் அறவிடப்படும் 02 அறைகள் சுமார் ஒரு மாத காலமாக மூடிப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 1.85 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல்கள் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2017 ஆம் ஆண்டிற்கான பொரள்ள மருத்துவமனையின் சுத்திகரிப்பு சேவைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மருத்துவமனையின் சுத்திகரிப்பு பணிகளுக்காக இரு தரப்பினரிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 02 ஆம் பந்திக்கமைய நாளாந்தம் 02 பணி பரிசோதகர்கள் மற்றும் 34 ஊழியர்களை சுத்திகரிப்பு பணிகளுக்காக ஈடுபடுத்த வேண்டும். அதற்கு முரணாக 2017 சனவரி முதல் செப்தம்பர் வரையான காலப்பகுதியினுள் பணி பரிசோதகர்கள் சேவையாற்ற வேண்டிய நாட்களின் எண்ணிக்கையை விட 119 நாட்கள் குறைவாகவும், ஊழியர்கள் சேவையாற்ற வேண்டிய நாட்ளை விட 915 நாட்கள் குறைவாகவும் சேவையை வழங்கியிருந்தனர்.

(ii). சுத்திகரிப்பு ஒப்பந்த பணிகளுக்குரிய உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகளுக்காக மாதாந்தம் ரூபா 190,335 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மாதாந்தம் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படும் உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகளின் அளவு அல்லது அந்த பொருட்கள்

உரிய அளவுகளில் இடப்படுகின்றதா என்பது தொடர்பில் மருத்துவமனையின் எந்தவொரு உத்தியோகத்தரும் கண்காணிப்பில் அல்லது சரியென்று உறுதிப்படுத்தலொன்றை மேற்கொண்டிருக்கவில்லை.

(iii). சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களால் மாதாந்தம் எவ்வளவு கிருமிநாசினிகள் மற்றும் உபகரணங்கள் பெறப்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்கு முறையான பதிவேடொன்றேனும் அல்லது கோவைப்படுத்தப்பட்ட பட்டியல்கள், பணி பரிசோதகரிடம் காணப்படவில்லை. பணிப் பணிசோதகரால் உறுதிசெய்யப்பட்டவாறு சராசரியாக மாதமொன்றிற்கு ரூபா 45,000 பெறுமதியான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், மாதமொன்றிற்கு ரூபா 190,335 படி செலுத்தப்பட்டிருந்தமையால், 2017 சனவரி முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதியினுள் கிருமிநாசினி பொருட்களுக்காக ரூபா 581,340 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) ஆயர்வேத ஆராய்ச்சிப் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தினை அச்சிடல்

-----------------------------------------------------------------------------------------------------------

ஆயுர்வேத அறிவினை பாதுகாக்கும் நோக்கில் தொகுப்புக் குழுவிற்கு படிகள் மற்றும் உபகரண செலவினங்களுக்காக 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் முறையே ரூபா 253,250 மற்றும் ரூபா 1,446,750 செலவிடப்பட்டு ஆயுர்வேத ஆய்வுப் புத்தகத்தின் 750 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன், அந்த புத்தகங்கள் 2018 மே 03 ஆந் திகதி திணைக்களத்திற்கு கிடைத்திருந்தன. அந்த 750 பிரதிகள் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் விற்பனைக்காக வெளியிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் அச்சிடப்பட்ட 831 ஆயுர்வேத சமிக்ஷாவ புத்தகங்கள் மற்றும் 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் அச்சிடப்பட்ட 1,271 ஆயுர்வேத சமிக்ஷாவ புத்தகங்களும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்தது.

(க) ஆயர்வேத நிறுவனத்தை பதிவு செய்தல் மற்றும் வருடாந்தம் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 1961 இன் 31 ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கமைய ஆயுர்வேத ஆரோக்கியசாலை, மருந்து பொருள் உற்பத்திக்கூடல் மற்றும் மருந்துக் களஞ்சியம் ஆகியவற்றில் பதிவு செய்வதற்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தலின் தாமதமொன்று நிலவுவதுடன், 2018 மார்ச் 08 ஆந் திகதியளவில் அவ்வாறு கிடைத்திருந்த 2,500 விண்ணப்பங்கள் தொடர்பில் பதிவு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii). 1961 இன் 31 ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கமைய ஆயுர்வேத ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்புகள் பிரதி அல்லது உதவி ஆயுர்வேத ஆணையாளர்களுக்கு மாத்திரம் கையளிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும், அந்த பொறுப்பு மற்றும் அதிகாரங்கள் மாகாண ஆயுர்வேத ஆணையாளர்களுக்கும் அவர்களால் பெயரிடப்படும் அலுவலர்களுக்கும் கையளிக்கப்பட்டிருந்தது.

(iii). ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத சிகிச்சை நிலையம், பஞ்சகர்ம நிறுவனங்கள், ஹோட்டல்களிலுள்ள பஞ்சகர்ம நிறுவனங்கள், தனியார் ஆயுர்வேத மருத்துவமனைகள், உற்பத்திக்கூடங்கள்,

சந்தைகள் தொடர்பிலும், இறக்குமதி செய்யப்பட்ட மருந்துப்பொருட்களுக்காக புதிய பதவினை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை புதுப்பித்தல் தொடர்பில் நடாத்திச் செல்லப்படும் கணனி தாவு கட்டமைப்பினை நாளதுவரையாக்கி முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) ஆயர்வேத சட்டக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிராமை

---

1961 இன் 31 ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச்சட்டத்தின் 77 ஆம் பிரிவிற்கமைய, ஆயுர்வேத மருத்துவ துறையில் அலுவைச்சிகிச்சை விஞ்ஞானத்தின் பணிகளுக்காக ஏதேனுமொரு பொருளொன்று, திரவமொன்று அல்லது மருந்து பொருளொன்றினை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், விநியோகம், பகிர்ந்தளித்தல் அல்லது தயாரிப்பதனை தடை செய்வதற்கு, முறைமைப்படுத்துவதற்கு அல்லது கட்டுபடுத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் உள்ளடங்கிய சட்டக் கோவையொன்றினை தயாரிக்க முடியும். இது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் 266/2012 ஆம் இலக்க, 284/2012 ஆம் இலக்க மற்றும் 26/2017 ஆம் இலக்க வழக்குகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 107/2010 ஆம் இலக்க வழக்கு தீர்ப்புக்களின் மூலம் சட்டக் கோவையொன்றை தயாரித்து வெளியிடுமாறு கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சட்டக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) ஆயர்வேத போதனா மருத்துவமனையின் ஆராய்சி மருத்துவமனைகளை தாபித்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 1961 இன் 31 ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் மூலம் ஆயுர்வேத ஆணையாளருக்கு, ஆயுர்வேத ஆரோக்கியசாலைகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை நிறுவி நடாத்திச் செல்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசினால் நிறுவப்பட்டுள்ள ஆயுர்வேத ஆரோக்கியசாலைகள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் தாபிப்பினை கருத்திற் கொண்டு புதிய ஆரோக்கியசாலைகள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவங்களை தாபிப்பதற்கு மற்றும் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). 1962 ஆம் ஆண்டின் போது நாவின்ன ஆயர்வேத ஆராய்ச்சி மருத்துவமனை தாபிக்கப்பட்டடு அதன் பின்னர் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மேலும் 04 ஆயர்வேத ஆராய்ச்சி மருத்துவமனைகள் தாபிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த மருத்துவமனைகளில் நோய்கள் தொடர்பான ஆராச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அல்லது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பில் அல்லது சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(கீ) மருத்துவ உற்பத்திக்காக உள்நாட்டு விநியோகஸ்தர்களிடமிருந்து பச்சை மற்றும் உலர்ந்த மூலிகைகளை கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 34.73 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்தின் மூலிகைத் தோட்டங்களில் அந்த தேவைப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு உரிய மற்றும் முறையான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(கு) கிராந்துக் கோட்டை மூலிகைத் தோட்டத்தின் 178 ஏக்கர்கள் பரப்பளவான நிலப்பிரதேசத்தில் சுமார் 103 ஏக்கர்கள் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 75 ஏக்கர்களை பயிரிடுவதற்கு உரிய மற்றும் முறையான வேலைத்திட்டமொன்று இனங்கானப்பட்டிருக்கவில்லை.

(கூ) 6 மூலிகைத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள 223 ஏக்கர்கள் பரப்பளவான நிலப்பிரதேசத்தில் குறுங்கால மருந்துச் செடிகள் ஊடு பயிர்ச்செய்கையாக ஆரம்பிப்பதற்கான இயலுமைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தி திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்ட சேவைகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வலைத்தளத்தினை நாளதுவரையாக பேணிச்செல்லாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). திணைக்களத்தின் நிறுவனப் பிரிவிற்கு திணைக்களத்தின் வலைத்தளத்தினை நடாத்திச் செல்லும் பணியும், திறன்கள் பிரிவிற்கு பயன்படுத்தப்படும் விண்ணப்ப படிவங்களை மூன்று மொழிகளிலும் வலைதளத்திற்கு உட்புகுத்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கும் பணியும் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், திணைக்களத்தின் வலைதளமானது நாளதுவரையாக பேணப்பட்டிராததுடன், அனைத்து தகவல்களையும் மூன்று மொழிகளிலும் உட்புகுத்துவதற்கு பதிலாக பெரும்பாலான தகவல்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் உட்புகுத்தப்பட்டிருந்தன.

(ii). திணைக்களத்தின் கீழ் செயற்படும் உப நிறுவனங்கள் மற்றும் அனைத்து மருத்துவமனைகளிலும் நிறைவேற்றப்படும் பணிகள் மற்றும் அந்தந்த மருத்துவமனைகளால் நடாத்தப்படும் பிணியாய்வுகள் மற்றும் அதற்குரிய திகதிகள், ஏனைய சிகிச்சை முறைமைகள், நடமாடும் பிணியாய்வு போன்ற அனைத்து சேவைகளினதும் தகவல்கள் வலைதளத்தில் உட்புகுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தகவல்களை அறிந்துகொள்ளும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தலின் செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2018 மார்ச் மாதமளவில் திணைக்களத்தால் திணைக்களத்தின் மற்றும் உப அலுவலகங்களின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும், மக்களின் தகவல் அறியும் தேவைப்பாடுகள் பதியப்படுதல் மற்றும் அந்த தேவைப்பாடுகளுக்கு பதிலளித்தல் தொடர்பில் மற்றும் மக்களால் முன்வைக்கப்படும் புகார்களுக்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் போன்ற அதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் பதிவேடுகளில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii). திணைக்களத்தின் வலைத்தளத்தினுள் தகவலறியும் சட்டத்திற்கு திணைக்களம் செயற்படும் விதம் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வலைதளத்தினூடாக மக்களின் புகார்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 721.25 | 636.57 | 84.68 | 11.74 |
| | மூலதனம் | 575.72 | 124.75 | 450.97 | 78.33 |
| | **மொத்தம்** | **1,296.97** | **761.32** | **535.65** | **41.30** |
| **2014** | மீண்டுவருபவை | 848.82 | 821.14 | 27.68 | 3.26 |
| | மூலதனம் | 498.69 | 357.98 | 140.71 | 28.21 |
| | **மொத்தம்** | **1,347.51** | **1,179.12** | **168.39** | **12.50** |
| **2015** | மீண்டுவருபவை | 1,166.97 | 1,109.01 | 57.96 | 4.97 |
| | மூலதனம் | 575.00 | 413.01 | 161.99 | 28.17 |
| | **மொத்தம்** | **1,741.97** | **1,522.02** | **219.95** | **12.63** |
| **2016** | மீண்டுவருபவை | 1,272.50 | 1,239.52 | 32.98 | 2.59 |
| | மூலதனம் | 1,300.60 | 612.89 | 687.71 | 52.88 |
| | மொத்தம் | 2,573.10 | 1,852.41 | 720.69 | 28.01 |
| **2017** | மீண்டுவருபவை | 1,267.76 | 1,238.26 | 29.50 | 2.33 |
| | மூலதனம் | 1,122.46 | 538.90 | 583.56 | 51.99 |
| | **மொத்தம்** | **2,390.22** | **1,777.16** | **613.06** | **25.65** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றமை**

மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை மற்றும் முகாமைத்துவ செயற்திறனின்மை ஆகியவற்றின் காரணமாக 10 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 524.18 மில்லியனில் ரூபா 467.78 மில்லியன் எஞ்சியிருந்ததுடன், அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 55 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 50 | 48.76 | 33 | 38 | 190 | 87 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளபடியாக இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நீங்கலாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.10 மில்லியன் ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 2.11 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி மதிப்பீட்டிற்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரிய கட்டுநிதிகள் மற்றும் கிடைத்த கட்டுநிதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைத்த கட்டுநிதி | திட்டமிட்ட மற்றும் விண்ணப்பித்த கட்டுநிதிக்கிடையேயான வேறுபாடு | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கிடையேயான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 208.34 | 212.23 | 185.71 | (3.89) | 26.52 |
| பெப்ரவரி | 205.19 | 100.27 | 159.74 | 104.92 | (59.48) |
| மார்ச் | 108.93 | 108.88 | 91.08 | 0.05 | 17.80 |
| ஏப்ரல் | 120.93 | 145.23 | 128.36 | (24.30) | 16.87 |
| மே | 108.53 | 129.82 | 105.96 | (21.29) | 23.86 |
| யூன் | 116.23 | 140.82 | 108.72 | (24.59) | 32.10 |
| யூலை | 129.63 | 183.70 | 145.32 | (54.07) | 38.38 |
| ஆகஸ்ட் | 126.33 | 182.11 | 121.49 | (55.78) | 60.62 |
| செப்தெம்பர் | 174.13 | 173.97 | 103.82 | 0.16 | 70.15 |
| ஒக்தோபர் | 185.43 | 287.70 | 122.32 | (102.27) | 165.38 |
| நவம்பர் | 243.08 | 297.01 | 174.49 | (53.93) | 122.52 |
| திசெம்பர் | 228.83 | 642.91 | 268.80 | (414.08) | 374.11 |
| மொத்தம் | 1,955.58 | 2,604.65 | 1,715.81 | 648.48 | 888.23 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம், ஏதேனுமொரு சிறப்பான பணியொன்றிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி அந்த பணி நிறைவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 18 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 864,064 கூட்டுத்தொகையான முற்பணங்கள் பணி நிறைவடைந்து 16 முதல் 148 நாட்கள் வரையான காலம் தாழ்த்தப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2017 ஆம் ஆண்டினுள் பதவிநிலையற்ற 33 உத்தியோகத்தர்களுக்கு 182 சந்தர்ப்பங்களில் செயல்நிமித்த உப கட்டுநிதியாக ரூபா 3.21 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 2.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(இ) உரிய முறையில் தயாரிக்கப்படும் மதிப்பீடொன்றி மீளாய்வாண்டின் போது 458 சந்தர்ப்பங்களில் ரூபா 13 மில்லியன் செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 10 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம், ஏதேனுமொரு விசேடமான

பணியொன்றிற்காக ரூபா 100,000 தொகையான நிதி எல்லையினுள் செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட முடியுமான போதிலும், திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது ரூபா 100,000 எல்லையினை மிகைத்த பணிகளுக்காக 04 சந்தர்ப்பங்களில் ரூபா 1,176,250 தொகை 12 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**2.12 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 81.23 மில்லியனாகும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களைக் கடந்த (காணி வைப்புக்கள் நீங்கலாக) ரூபா 324,791 கூட்டுத்தொகையான 12 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொரள்ள ஆயர்வேத மருத்துவமனையின் செலுத்தும் வாட்டுகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களிடமிருந்து அறவிடப்படும் வைப்புத் தொகை அவர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியேறும் போது பட்டியல் பெறுமதிக்கு எதிரீடு செய்வதற்காக முறையான மற்றும் குறிப்பானதொரு வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2016 யூலை 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் செலுத்தும் வாட்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த 153 நோயாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பணமான ரூபா 1,396,840 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த பணம் 2017 திசெம்பர் 14 ஆந் திகதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2017 ஆம் ஆண்டின் போது நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்த வைப்புப் பணங்கள் ரூபா 3,757,500 தொகை பட்டியல்களுக்கு எதிரீடு செய்யப்படாது 2018 யூன் 07 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.13 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் கீழ் காணப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.14 இணக்கமின்மைகள்

### 2.14.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | |
| | தபனவிதிக் கோவையின் XIV அத்தியாயம் | 1,073,333 | திணைக்களத்தின் கடமைகளுக்காக பயணங்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு தங்குதல் தொடர்பான கூட்டிணைந்த படியினை செலுத்துவதற்கு பதிலாக ஹோட்டல் மற்றும் தங்குமிட கட்டணங்கள் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>--------------------------------------<br>நிதிப்பிரமாணம் 102 முதல் 109 வரை | 158,000 | விபத்திற்குள்ளாகியிருந்த வாகனமொன்றை பழுதுபார்ப்பதற்காக ரூபா 158,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், விபத்திற்கு பொறுப்புகூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

## 2.15 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 மருத்துவமனைகள், ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நாவின்ன ஆராய்ச்சி மருத்துவமனை, உள்நாட்டு மருத்துவ முறைகள் தொடர்பான தேசிய நிறுவனம் மற்றும் 06 மூலிகைத் தோட்டங்களை கொண்ட ஒட்டுமொத்த திணைக்களத்திலிருந்தும், ஆயர்வேத மருத்துவ சபையிலிருந்தும் கணக்குகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்விற்காக பிரதம உள்ளக கணக்காய்வாளருடன் மேலும் இரு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறே அந்த இரு உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு வருடமும் சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியினுள் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மற்றும் மருத்துவ பானங்களை வழங்கும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். இதன் காரணமாக நிதிப்பிரமாணம் 134(1) இன் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு பிரிவின் சுயாதீனத்துவம் உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134 (2) இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 25 பிரதான பணிகளிடையே 18 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.16 மனிதவள முகாமைத்துவம்

### 2.16.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 958.97 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 695,412 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 653 | 568 | 85 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 46 | 07 | 39 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 451 | 249 | 202 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 776 | 555 | 221 |
| | **மொத்தம்** | **1926** | **1,379** | **547** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைப்பாட்டினை மிகைத்து பதவியணியை அங்கீகரித்துக்கொள்ளல்

மீளாய்வின் இறுதியளவில் 547 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கிற்கமைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்த போதிலும், பின்வரும் சந்தர்ப்பங்களினை தவிர அந்த சேமிப்புகள் தொடர்பில் பதவியணியிலான வெற்றிடங்கள் தாக்கம் செலுத்தியிருக்கவில்லை. இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் மிகை மதிப்பீடொன்று இடம்பெற்றுள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i). திணைக்களத்தின் பிரதான பணிகளுக்கிடையேயான மாநாடுகள், கல்வி வகுப்புகள் மற்றும் ஆயுர்வேதம் தொடர்பான பாடநெறிகளை நடாத்தும் பணிகளை நிறைவேற்றுவதற்காக தாபிக்கப்பட்டிருந்த உள்நாட்டு மருத்துவ முறைமைகள் தொடர்பான தேசிய நிறுவனத்தின் (NITM) 16 சிரேஷ்ட பதவிகளிடையே பிரதிப் பணப்பாளர் (பொது) மற்றும் பிரதி பணிப்பாளர் (தொழில்நுட்ப கல்வி) போன்ற 02 பதவிகள் மற்றும் 08 அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் பதவிகளிடையே 04 பதவி வெற்றிடங்கள் நிலவின.

(ii). திணைக்களத்தின் பிரதான பணிகளிடையேயான உள்நாட்டு மருத்துவ முறைமைகளை கட்டியெழுப்புவதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நேரடியாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக்கூடிய 02 விஞ்ஞானிகளின் பதவிகள், 08 நிபுணத்துவ மருத்துவர் பதவிகள், 05 விசேட மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 08 விஞ்ஞான உத்தியோகத்தர் பதவிகள் உள்ளடங்களாக சிரேஷ்ட மட்டத்திலான 67 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 24 பதவிகளும், 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மூன்றாம் மட்டத்திலான 23 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 22 பதவிகளும், 03 மருத்துவ ஆராச்சி நிபுணர் பதவிகள், 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 05 ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் உள்ளடங்கலாக இரண்டாம் மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட 84 பதவிகளில் 45 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் கீழான 9 மருத்துவமனைகளில் தேவைப்பாடுடைய 9 பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 976 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 689 ஆகும்.

(இ) பதவியணியினரை பயிற்றுவித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). திணைக்களத்திற்கு இணைப்புச்செய்யப்பட்டுள்ள பதவியணியை ஆண்டினுள் பயிற்றுவித்தல் தொடர்பில் பயிற்றுவித்தல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், வருடாந்தம் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி மணித்தியாலங்களை தீர்மானித்து அதற்கமைய வருடாந்தம் உத்தியோகத்தர்களின் செயலாற்றலை அளவிடுவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). மீளாய்வாண்டினுள் திணைக்களத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள 1,379 எண்ணிக்கையான மொத்த பதவியணியில் 19 பேருக்காக மாத்திரம் ரூபா 319,225 செலவிடப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், விசேட பயிற்சிகள் மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் காணப்படும் உப நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பயிற்சிகள் தொடர்பான அனைத்து தகவல்களும் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii). மீளாய்வாண்டின் பயிற்சிகளுக்காக ஒதுக்கப்ட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 89 சதவீதமான ரூபா 3,153,000 செலவிடப்பட்டு, திணைக்களத்தின் 538 மருத்துவ உத்தியோகத்தர்களிடையே 34 மருத்துவ உத்தியோகத்தர்கள் பட்டப்பின் படிப்புகளில் ஈடுபட்டிருந்தனர். எவ்வாறெனினும், அந்த 34 பேரையும் தெரிவு செய்த முறைமை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. பயிற்சி செலவின விடயத்தின் கீழ் அனைத்து மட்டத்திலுமான உத்தியோகத்தர்களுக்காக முரண்பாடுகள் எதுவுமின்றி பயிற்சிகள் கிடைக்கும் வகையில் பொருத்தமான பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.17 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நிதிப்பிரமாணம் 891 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை தேவையான அனைத்து உத்தியோகத்தர்களினதும் பெயர்கள் உள்ளடங்களி பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.